திரு. எ. சுப்பிரமணியம் : இந்த சென்டருக்கான நிதிவசதிகளை யார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள் ? அரசு கொஞ்சம் பணம் கொடுக்கிறது. டேனிஷ் நிறுவனம் கொடுக்கிறது என்று சொன்னார்கள். எங்கெங்கே யிருந்து நிதி அதற்குத் தரப்படுகிறது ? ஐ.நா. நிறுவனத்திடமிருந்து பண உதவி இதற்குத் தரப்படுகிறதா என்பதையும் அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முழு விவரங்கள் அதைப் பற்றி கிடைக்கவில்லை. மாணவர்களுக்கு வசதிகள் செய்வதற்கு Madras Committee of the World University Service என்று இருக்கிறது, "Indian National Committee of the World University Service" என்று இருக்கிறது. இவற்றிற்கு ஐ.நா.வின்சார்பிலே ஓரளவுக்கு உதவி கிடைக்கலாம் என்று நினைக்கிறேன். அதைப்பற்றிய முழுத் தகவலும் என்னிடத்திலே இல்லை. மாணவர்கள் தங்குவதற்காக வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக ஒரு வாடகைத் தொகை வசூலித்து அதன்மூலம் சரிக்கட்டுகிறார்கள். அதைத்தவிர, அடக்கவிலைக்கு பொருள்களைக் கொடுக்கக்கூடிய முறையிலே கூட்டுறவு முறையிலே சங்கங்களை அமைத்திருக்கிறார்கள். மற்ற என்ன என்ன வகைகளிலே நிதி வசதிகள் தரப்படுகின்றன என்ற விவரம் வேண்டுமானால் தனிக்கேள்வி கேட்டால் விவரங்கள் சேகரித்துத் தரலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, எக்மோரிலே இருக்கின்ற வொர்ல்ட் யூனிவர்சிடி சர்வீசில் பரீட்சையில் தேறாத மாணவர்களும் தங்கியிருக்கிறார்கள் என்று பரவலாகக் குற்றச்சாட்டுக்கள் வருகின்றனவே, அதையெல்லாம் தடுக்கக்கூடிய முறையிலே கல்லூரி முதல்வர்களை அரசு கேட்டுக்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படி வற்புறுத்துகின்ற நிலைமை அரசுக்கு இல்லை. அந்தக் குழுவினர் தான் இதையெல்லாம் கவனிக்க வேண்டும்.

Grants to Bala Vihar

* 393 *Q.*—THIRU G. R. EDMUND :
THIRU N. K. PALANISAMY : } Will the Hon the Minister for Education and Tourism be pleased to state :—

(*a*) whether the Government have issued orders providing full grants to Bala Vihar, an Institution for the mentally retarded in Madras City ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) the details of other facilities offered to the Institution ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) & (உ) சென்னை கீழ்ப்பாக்கத்திலுள்ள பால விஹார் என்ற மன ஊனமுற்ற பிள்ளைகளின் பள்ளிக்கு முழு மான்யம் பெறும் மற்ற பள்ளிகளைப்போல் முழு போதனை மான்யமும் மற்றும் பராமரிப்பு மான்யமும் அளிக்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்த மாதிரி இன்னும் கோயம் புத்தூரிலும், சேலத்திலும் தனி நிறுவனங்கள் ஏற்படுத்துவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதைப்பற்றி குறிப்பு இல்லை தனிக்கேள்வி போடவும்.

மீன்பிடிப் படகுகள்.

* 398 வினா—திருமதி த. ந. அனந்தநாயகி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மத்திய அரசு சோவியத் நாடுடன் ஆழ்கடலில் மீன் பிடிக்கக் கூடிய சிறந்த வசதி கொண்ட விசைப்படகுகளை வாங்குவதற்கு ஒரு ஒப்பந்தம் செய்திருக்கிறதா ?

(இ) அந்த ஒப்பந்தத்தின் கீழ் தமிழ்நாட்டுக்குக் கிடைத்த விசைப் படகுகள் எத்தனை ?

(உ) அவற்றை விநியோகம் செய்ய அனுசரித்த முறை என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) (இ) & (உ) ஆழ்கடலிலும், உள்நாட்டிலும்கூட்டுறவு முறையில் மீன் பிடிப்பதற்கான ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள ருஷிய நாட்டுடன் பேச முயற்சி எடுத்து வருவதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது. இந்திய அரசின் வேளாண்மை அமைச்சகத்துடன் ருஷிய நாட்டு வாணிகக் குழு ஆலோசனை நடத்தியது. ஆழ்கடல் மீன்பிடி படகுகளை உள்நாட்டிலேயே கட்டுவதற்கான திறனை முழு அளவு பயன்படுத்துவதென்றும் எஞ்சிய தேவைகளை உத்தேச ஒப்பந்தத்தின்கீழ், ருஷியாவிலிருந்து அப்படகுகளை இறக்குமதி செய்து கொள்வதன் மூலம் சரிக்கட்டுவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ரஷ்ய நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சில குறிப்பீடுகளைக் கொண்ட படகுகளைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக் கூறினை ஆய்வு செய்யலாம் என்றும், அத்தகைய படகுகளின் தேவை எவ்வளவு என்பதைத் தங்களுக்குத் தெரிவிக்கலாம் என்றும் அப்போதுதான் ரஷ்ய அதிகாரிகளுடன் மேற்கொண்டு பேச்சு நடத்தும்போது அந்தப் படகுகளின் தேவை பரிசீலனையில் எடுத்துக் கொள்ளப்படலாம் என்றும் இந்திய அரசு இந்த அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.